**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு தொகையை அரசே ஏற்று வழங்குதல் – 2014–15 ஆம் நிதியாண்டிற்கு திட்ட தொடராணை மற்றும் ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.25

நாள்:30–03–2015
ஜய, பங்குனி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.71, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 17–07–2013.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் கடிதம் எண்.2111/ மா.தி.ந.3.1/2014, நாள் 11.6.2014 மற்றும் 13.3.2015.

---------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் நிதியாண்டில் வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு தொகையை அரசே ஏற்று, மானியமாக வழங்கும் திட்டத்திற்கு அனுமதியும் இத்திட்டத்திற்கென 2013–2014ம் நிதியாண்டிற்கு ரூ.50,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும், அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு, வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 2014–2015 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு பங்கு தொகையை அரசே ஏற்று வழங்க 1,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு சென்ற ஆண்டு செயல் திட்டத்துடன், அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, “வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்” கீழ், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5 விழுக்காடு தொகையை அரசே ஏற்று, மானியமாக வழங்கும் திட்டத்தினை 2014–15ம் நிதியாண்டில், தொடர, திட்டத் தொடராணையும் மற்றும் இச்செலவினத்திற்கென ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை

மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

“ 2235 சமூகப் பாதுகாப்பும், நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம் MU வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்–09 உதவித் தொகை 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.”

(ததொகு 2235–02–101-MU–0934)

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.17581/நிதி(சந)/2015, நாள்30–03–2015 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந) த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.